` திருத்துறைப்பூண்டி நகராட்சி

**சாதாரணக் கூட்ட நடவடிக்கைகள்**

**திருத்துறைப்பூண்டி நகர்மன்றத்தில் 30.09.2022 வெள்ளிக் கிழமை நகர்மன்றத் தலைவர் அவர்களால் நடத்தப்பட்ட சாதாரணக் கூட்ட நடவடிக்கைகள்.**

**முன்னிலை திருமதி.பா.கவிதா,பி.காம்.,**
**தலைவர்,**
**திருத்துறைப்பூண்டி நகர்மன்றம்**

| பொருள் எண் | பொருள்கள் விபரம் | நகர்மன்றத் தீர்மானம் | |
|---|---|---|---|
| | | தீர்மானம் எண் | விபரம் |
| 1 | நகராட்சி ஆணையர் அவர்களின் செப்டம்பர்-2022 மாதத்திற்கான நாட் குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும் மற்றும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.<br><br>**<u>அலுவலக குறிப்பு:</u>**<br><br>**1.** மன்றம் அனுமதித்து பதிவு செய்யலாம். | **111** | **பதிவு செய்யப்பட்டது** |
| 2 | திருத்துறைப்பூண்டி நகராட்சியில் வார்டு எண்.16 ஆட்டூர் ரோடு பகுதியில் கலைஞர் நகர்புற மேம்பாட்டு திட்டம் 2021-22ன்கீழ் சாலை அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது. மேற்படி இடம் திருமதி. வே.மகேஸ்வரி, ஆட்டூர் ரோடு, திருத்துறைப்பூண்டி அவர்கள் தனக்கு சொந்தமான இடம் எனக்கூறி ஆட்சேபனை தெரிவித்து வழக்கறிஞர் மூலம் அறிவிப்பு நகராட்சிக்கு அனுப்பப்பட்டுள்ளது. மேற்படி அறிவிப்பிற்கு நகராட்சி வழக்கறிஞர் மூலமாக பதில் அறிவிப்பு வழங்கிடவும், தொடர் நடவடிக்கை மேற்கொள்ளவும் அதற்காகும் உத்தேச செலவினத் தொகை ரூ.30,000/-க்கு மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும் மற்றும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது. | **112** | **அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது** |

| | | | |
|---|---|---|---|
| | **அலுவலக குறிப்பு:**<br><br>**1.** பொதுநிதியிலிருந்து செலவு மேற்கொள்ள மன்றம் அனுமதித்து பதிவு செய்யலாம்.<br><br>**ந.க.எண்.2284/2022/இ1** | | |
| **3** | திருத்துறைப்பூண்டி நகராட்சி பொறியியல் பிரிவு குடிநீர் பணிகளுக்கு நகராட்சி பராமரிப்பில் இயங்கி வரும் புதிய பேருந்து நிலைய கொள்ளிடம் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி மற்றும் 6 எண்ணிக்கையிலான மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகளிலிருந்து தினசரி பொதுமக்களுக்கு சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேற்படி குடிநீர் விநியோகத்திற்கு தேவையான சோடியம் ஹைபோகுளோரைடு இருப்பு இல்லாத காரணத்தினால் 2022-23ஆம் ஆண்டிற்கு தேவையான சோடியம் ஹைபோகுளோரைடு 21000 லிட்டர் கொள்முதல் செய்வதற்கு தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீட்டு தொகை ரூ.3.15 இலட்சத்திற்குமன்றத்தின் அனுமதிக்கும், பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.<br><br>**அலுவலக குறிப்பு:**<br><br>**1.** மன்றம் அனுமதிக்கலாம்.<br><br>**2.** மேற்படி செலவினத்தை குடிநீர் நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதித்து பதிவு செய்யலாம்.<br>ந.க.எண். 2296/2022/இ1 | **113** | **அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது** |

| | | | |
|---|---|---|---|
| **4** | திருத்துறைப்பூண்டி நகராட்சியில் பொறியியல் பிரிவு ஈப்பு வாகனம் எண்.TN-50R-1074 வாகனத்தின் காப்பீடு முடிவடைந்து விட்டதால் அதனை புதுப்பித்திட மேற்படி காப்பீடு நிறுவனமான தி ஓரியண்டல் இன்சூரன்ஸ் கம்பெனிக்கு செலுத்த ஆகும் செலவினத் தொகை ரூ.13,500/-க்கு மன்றத்தின் அனுமதிக்கும், பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.<br><br>**அலுவலக குறிப்பு:**<br><br>**1.** மன்றம் அனுமதிவழங்கலாம்.<br><br>**2.** அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று தொடர் நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அனுமதித்து பதிவு செய்யலாம்.<br><br>**ந.க.எண்.383/2011/இ1** | **114** | **அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது** |
| **5** | திருத்துறைப்பூண்டி நகராட்சியில் புதிய பேருந்து நிலையம் வளாகத்தில் புதிதாக அமைக்கப்பட்டு வரும் தினசரி காய்கறி மார்க்கெட் கட்டும் பகுதியில் பதிக்கப்பட்டிருந்த கொள்ளிடம் பிரதான குழாய் பழுதுகள் ஏற்பட்டுள்ளதால் அதனை மாற்றி அமைத்திடவும், சிங்களாந்தி நடுத்தெரு, சிங்களாந்தி திராவிடர்தெரு, கழுவமுள்ளி தெரு ஆகிய பகுதிகளில் குடிநீர் பிரதான குழாயில் அடைப்பு ஏற்பட்டு சீரான குடிநீர் விநியோகம் செய்ய இயலாத நிலையில் உள்ளதாலும், புதிய குடிநீர் விநியோக குழாய்கள் பதிக்கும் பணி மேற்கொள்ள தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீட்டு தொகை ரூ.2.15இலட்சத்திற்கு குடிநீர் நிதியின்கீழ் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கும், பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.<br><br>**அலுவலக குறிப்பு:**<br><br>**1.** குடிநீர் நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றம் அனுமதித்து பதிவு செய்யலாம். | **115** | **அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது** |

<table>
<tr><td></td><td>2. பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று தொடர் நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் ஏற்கலாம்.<br><br><u>ந.க.எண். 1049/2022/இ1</u></td><td></td><td></td></tr>
<tr><td>6</td><td>இந்நகராட்சியின் குடிநீர் நிதி 2021-2022-ன்கீழ் புதிய பேருந்து நிலையம் வளாகத்தில் புதிதாக அமைக்கப்பட்டு வரும் தினசரி காய்கறி மார்க்கெட் கட்டும் பகுதியில் பதிக்கப்பட்டிருந்த கொள்ளிடம் பிரதான குழாய் பழுதுகள் ஏற்பட்டுள்ளதால் அதனை மாற்றி அமைத்திடவும், சிங்களாந்தி நடுத்தெரு, சிங்களாந்தி திராவிடர்தெரு, கழுவமுள்ளி தெரு ஆகிய பகுதிகளில் குடிநீர் பிரதான குழாயில் அடைப்பு ஏற்பட்டு சீரான குடிநீர் விநியோகம் செய்ய புதிய குடிநீர் விநியோக குழாய்கள் பதிக்கும் பணியினை மேற்கொள்வதற்கு 25.07.2022 அன்று விலைப்புள்ளிகள் கோரப்பட்டதில் வரப்பெற்ற இரண்டு விலைப்புள்ளிகள் மன்றத்தின் அனுமதிக்கும், பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.<br><br>
<table>
<tr><th>வ. எண்</th><th>ஒப்பந்ததாரரர்பெயர்</th><th>மதிப்பீடு ரூ.இலட்சத்தில்</th><th>ஒப்பந்தப் புள்ளி மதிப்பீடு ரூ.</th></tr>
<tr><td>1</td><td>திருமதி.எஸ்.விஜயகுமாரி,<br>ஒப்பந்ததாரர்,<br>திருத்துறைப்பூண்டி</td><td rowspan="2">ரூ.1,78,214.00</td><td>ரூ.1,82,000.00</td></tr>
<tr><td>2</td><td>M/S.மங்கையர்க்கரசி கன்ஸ்ட்ரக்ஷன்ஸ்,<br>ஒப்பந்ததாரர்,<br>திருத்துறைப்பூண்டி</td><td>ரூ.1,78,000.00</td></tr>
</table></td><td>116</td><td>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது</td></tr>
</table>

<table>
<tr><td></td><td>
<u>அலுவலக குறிப்பு:</u>
1. வரப்பெற்ற இரண்டு விலைப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட குறைவான தொகைக்கு விலைப்புள்ளி வழங்கியுள்ள M/S.மங்கையர்க்கரசி கன்ஸ்ட்ரக்ஸன், திருத்துறைப் பூண்டி என்ற ஒப்பந்ததாரரின் விலைப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.
2. அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று தொடர் நடவடிக்கை மேற் கொண்டதை மன்றம் அனுமதித்து பதிவு செய்யலாம்.
<u>ந.க.எண்.1049/2022/இ1</u>
</td><td></td><td></td></tr>
<tr><td>7</td><td>
இந்நகராட்சியின் பொது நிதி 2021-2022-ன்கீழ் இந்நகராட்சியினை வண்ண அலங்கார விளக்குகளால் அலங்கரித்தல், சாமியான பந்தல் அமைத்தல், சுதந்திர போராட்ட தியாகி சீனிவாசராவ் மணிமண்டபத்தினை மின் விளக்குகளால் அலங்கரித்தல் ஆகிய பணியினை மேற்கொள்வதற்கு 12.08.2022 அன்று விலைப்புள்ளிகள் கோரப்பட்டதில் வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகள் மன்றத்தின் அனுமதிக்கும், பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.
<table>
<tr><th>வ. எண்</th><th>விலைப்புள்ளிதாரரர் பெயர்</th><th>மதிப்பீடு ரூ.</th><th>விலைப்புள்ளி மதிப்பீடு ரூ.</th></tr>
<tr><td>1</td><td>பட்டுஎலக்ட்ரிக்கல்ஸ், திருத்துறைப்பூண்டி</td><td rowspan="3">ரூ.15,000/-</td><td>15,000/-</td></tr>
<tr><td>2</td><td>ஜோசப்எலக்ட்ரிக்கல்ஸ், திருத்துறைப்பூண்டி</td><td>18,000/-</td></tr>
<tr><td>3</td><td>ரேவதிசவுண்ட்சர்வீஸ், திருத்துறைப்பூண்டி</td><td>16,350/-</td></tr>
</table>
</td><td>117</td><td>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது</td></tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| | **<u>அலுவலக குறிப்பு:</u>**<br>1. வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட குறைவான தொகைக்கு விலைப் புள்ளி வழங்கியுள்ள பட்டு எலக்ட்ரிக்கல்ஸ், திருத்துறைப்பூண்டி என்ற நிறுவனத்தின் விலைப் புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.<br>2. அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று தொடர் நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அனுமதித்து பதிவு செய்யலாம்.<br>**<u>ந.க.எண். 2134/2022/இ1</u>** | | |
| **8** | திருத்துறைப்பூண்டி நகராட்சியில் இந்திய திருநாட்டின் 75-வது சுதந்திர தினத்தை முன்னிட்டு திருத்துறைப்பூண்டி நகராட்சி பகுதியிலுள்ள அனைத்து வீடுகளிலும் தேசிய கொடி ஏற்றவும், நகராட்சி அலுவலகத்தை வண்ண அலங்கார விளக்குகளால் 13.08.2022 மற்றும் 14.08.2022 ஆகிய நாட்களில் அலங்கரித்து மின் விளக்குகளை ஒளிர செய்யவும், சிறப்பான முறையில் சுதந்திர தினத்தை கொண்டாடிடவும் தெரிவிக்கப்பட்டதன் அடிப்படையில் இந்நகராட்சியினை வண்ண அலங்கார விளக்குகளால் அலங்கரித்தல், சாமியானபந்தல் அமைத்தல், சுதந்திர போராட்ட தியாகி சீனிவாசராவ் மணிமண்டபத்தினை மின்விளக்குகளால் அலங்கரித்தல் ஆகியப் பணிகளை மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவினத் தொகை ரூ.15,000/-க்கு (ரூபாய் பதினைந்தாயிரம் மட்டும்) மன்றத்தின் அனுமதிக்கும், பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு:</u>**<br>1. பொது நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதித்து பதிவு செய்யலாம். | **118** | **அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது** |

| | | | |
|---|---|---|---|
| | **2.** பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று தொடர் நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் ஏற்கலாம்.<br><br>**<u>ந.க.எண். 2134/2022/இ1</u>** | | |
| **9** | திருத்துறைப்பூண்டி நகராட்சியில் எதிர்வரும் வடகிழக்கு பருவ மழையை முன்னிட்டு முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக வார்டு எண்.6 அரியலூர் பகுதியிலும் மற்றும் வார்டு எண்.5 புனித தெரசாள் பெண்கள் மேல்நிலைப் பள்ளி முதல் புதிய பேருந்து நிலையம் வரை உள்ள மழைநீர் வடிகால் பகுதிகிளிலும் வாய்க்கால்களை சுத்தம் செய்து பராமரித்திட மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், தஞ்சாவூர் அவர்களால் அறிவுறுத்தப்பட்டுள்ளது. எனவே இந்நகர் பகுதியிலுள்ள அனைத்து வடிகால் வாய்க்கால்களையும் ஜே.சி.பி மற்றும் ஹிட்டாச்சி இயந்திரங்களை பயன்படுத்தி தூர் வாரும் பணிக்கு தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீட்டு தொகை ரூ.1.50இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கும், பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.<br><br>**<u>அலுவலக குறிப்பு:</u>**<br><br>**1.** மேற்படி பணியினை பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதித்து பதிவு செய்யலாம்.<br>**2.** பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்றத் தலைவரின் முன் அனுமதி பெற்று தொடர் நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் ஏற்கலாம்.<br><br>**<u>ந.க.எண். 2249/2022/இ1</u>** | **119** | **அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது** |

<table>
<tr>
<td>10</td>
<td>
இந்நகராட்சியின் பொது நிதி 2021-2022ன்கீழ் எதிர்வரும் வடகிழக்கு பருவ மழையை முன்னிட்டு முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக வார்டு எண்.6 அரியலூர் மற்றும் வார்டு எண்.5 புனித தெரசாள் பெண்கள் மேல்நிலைப் பள்ளி முதல் புதிய பேருந்து நிலையம் வரை உள்ள பகுதிகளில் மழைநீர் வடிகால் வாய்க்கால்களை சுத்தம் செய்து பராமரிக்கும் பணிக்கு ரூ.1.50இலட்சம் மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ள 26.08.2022 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.
<table>
<tr><th>வ. எண்</th><th>ஒப்பந்ததாரர் பெயர் மற்றும் முகவரி</th><th>ஒப்பந்தப் புள்ளி மதிப்பீடு ரூ.</th><th>ஒப்பந்தப் புள்ளி தொகை</th><th>சதவீதம் குறைவு/ அதிகம்</th></tr>
<tr><td>1</td><td>M/S.மங்கையர்க்கரசி கன்ஸ்ட்ரக்ஷன்ஸ். திருத்துறைப்பூண்டி</td><td rowspan="2">1,24,800/-</td><td>1,20,000/-</td><td>3.85சதவீதம் குறைவு</td></tr>
<tr><td>2</td><td>திரு.பி.கண்ணன். திருத்துறைப்பூண்டி</td><td>1,34,400/-</td><td>7.69சதவீதம் அதிகம்</td></tr>
</table>
<u>அலுவலக குறிப்பு:</u>
<ol>
<li>மேற்காணும் பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட 3.85 சதவீதம் குறைவான தொகைக்கு ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள M/S.மங்கையர்க்கரசி கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் திருத்துறைப் பூண்டி என்ற நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.</li>
<li>பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்றத் தலைவரின் முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கிய இவ்வலுவலக நடவடிக்கையை மன்றம் அனுமதித்து பதிவு செய்யலாம்.</li>
</ol>
</td>
<td>120</td>
<td>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| | **<u>ந.க.எண்.2249 /2022/இ1</u>** | | |
| **11** | திருத்துறைப்பூண்டி நகராட்சியில் வட கிழக்கு பருவ மழையை முன்னிட்டு முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக வார்டு எண்.16 ஆட்டூர் ரோடு, வார்டு எண்.9 தெற்கு வீதி மற்றும் கீழ வீதி வரை உள்ள பகுதிகளில் மழைநீர் வடிகால் வாய்க்கால்களை சுத்தம் செய்து பராமரித்திட மாவட்ட ஆட்சித் தலைவலர் மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், தஞ்சாவூர் அவர்களால் அறிவுறுத்தப்பட்டுள்ளது. எனவே இந்நகர் பகுதியில் உள்ள அனைத்து வடிகால் வாய்க்கால்களையும் ஜே.சி.பி மற்றும் ஹிட்டாச்சி இயந்திரங்களை பயன்படுத்தி தூர்வாரிட தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீட்டு தொகை ரூ.1.50இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கும், பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.<br><br>**<u>அலுவலக குறிப்பு:</u>**<br><br>**1.** மேற்படி பணியினை பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதித்து பதிவு செய்யலாம்.<br>**2.** பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்றத் தலைவரின் முன் அனுமதி பெற்று தொடர் நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் ஏற்கலாம்.<br><br>**<u>ந.க.எண்.2249/2022/இ1</u>** | **121** | **அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது** |
| **12** | இந்நகராட்சியின் பொது நிதி 2021-2022ன்கீழ் வடகிழக்கு பருவ மழையை முன்னிட்டு முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக வார்டு எண்.16 ஆட்டூர் ரோடு, வார்டு எண்.9 தெற்கு வீதி மற்றும் கீழ வீதி வரை உள்ள வார்டுகளில் மழைநீர் வடிகால் வாய்க்கால்களை சுத்தம் செய்து பராமரிக்கும் பணிக்கு ரூ.1.50இலட்சம் மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ள 26.08.2022 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் அனுமதிக்கும், பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது. | **122** | **அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது** |

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் மற்றும் முகவரி திருவாளர்கள் | ஒப்பந்தப் புள்ளி மதிப்பீடு ரூ. | ஒப்பந்தப் புள்ளி தொகை ரூ. | சதவீதம் குறைவு/ அதிகம் |
|---|---|---|---|---|
| 1 | எஸ்.விஜயகுமாரி, திருத்துறைப்பூண்டி | 1,24,800/- | 1,23,840/- | 0.77 சதவீதம் குறைவு |
| 2 | எஸ்.ஞானசுந்தரம். திருத்துறைப்பூண்டி | | 1,44,000/- | 15.38 சதவீதம் அதிகம் |

**<u>அலுவலக குறிப்பு:</u>**

1. மேற்காணும் பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளி களில் மதிப்பீட்டைவிட 0.77 சதவீதம் குறைவான தொகைக்கு ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள திருமதி.எஸ்.விஜயகுமாரி என்ற ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கிய இவ்வலுவலக நடவடிக்கையை மன்றம் அனுமதித்து பதிவு செய்யலாம்.

**<u>ந.க.எண். 2249/2022/இ1</u>**

| | | | |
|---|---|---|---|
| **13** | திருத்துறைப்பூண்டி நகராட்சியில் வார்டு எண்.3 குட்ஷெட் தெருவில் திருத்துறைப்பூண்டி சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் 2021-22ன்கீழ் ரூ.1.00 இலட்சம் மதிப்பீட்டில் குடிநீர் நீர்த்தேக்க தொட்டி அமைக்கும் பணிக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவரின் நிர்வாக அனுமதி ந.க.எண்.6298/2021/அ5 நாள்.08.03.2022ன்படி வழங்கப்பட்டு பணிகள் மேற்கொள்ள 26.05.2022 அன்று பணி உத்தரவு வழங்கப்பட்டது. இந்நிலையில் மேற்படி பணி 15-வது நிதிக்குழு திட்ட நிதியின்கீழ் மேற்கொள்ளப்பட்டுள்ளதால் இதே மதிப்பீட்டு தொகை ரூ.1.00 இலட்சத்திற்கு மாற்று இடமான வார்டு எண்.10 மீனாட்சி வாய்க்கால் புதுத் தெருவில் பணிகள் மேற்கொள்ள தெரிவித்து திருத்துறைப்பூண்டி சட்டமன்ற உறுப்பினர் அவர்களால் 10.09.2022 அன்று கடிதம் வழங்கப்பட்டுள்ளது. எனவே, ரூ.1.00 இலட்சம் மதிப்பீட்டில் வார்டு எண்.10 மீனாட்சி வாய்க்கால் புதுத் தெருவில் பூஸ்டர் பம்ப் ரூம் அமைத்து கொள்ள திருத்திய நிர்வாக அனுமதி மாவட்ட ஆட்சித் தலைவர் திருவாரூர் அவர்களிடம் பெற மன்றத்தின் அனுமதிக்கும், பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப் படுகிறது.<br><br>**<u>அலுவலக குறிப்பு:</u>**<br><br>**1.** மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் திருத்திய நிர்வாக அனுமதி பெற்று பணியினை தொடங்க மன்றம் அனுமதி வழங்கலாம்.<br><br>**2.** அவசர அவசியம் கருதி நகர் மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று தொடர் நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அனுமதித்து பதிவு செய்யலாம்.<br>**<u>ந.க.எண். 594 /2022/இ1</u>** | **123** | **அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது** |

| | | | |
|---|---|---|---|
| **14** | திருத்துறைப்பூண்டி நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.1, 2, 5, 9, 10, 16, 26 ஆகிய வார்டுகளில் உள்ள வணிகப் பகுதிகளில் ரூ.12.56இலட்சம் மதிப்பீட்டில் புதிதாக கண்காணிப்பு கேமரா பொருத்திட நமக்கு நாமே திட்டத்தின்கீழ் பணிகள் மேற்கொள்ள திட்ட மதிப்பீடு தொகை ரூ.12.56 இலட்சத்தில் 50% பங்குத் தொகை ரூ.6.28இலட்சத்திற்கு பேங்க் ஆப் இந்தியா வங்கி காசோலை எண்.337314 நாள்.08.07.2022ன்படி வங்கி கணக்கில் செலுத்தி சேம்பர் ஆப் காமர்ஸ் திருத்துறைப்பூண்டி அவர்கள் விண்ணப்பித்துள்ளார்கள். மேற்படி பணிக்கு நிர்வாக அனுமதி கோரி முன்மொழிவு சமர்ப்பிக்கப்பட்டதில் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் செயல்முறை ஆணை கடிதம் ந.க.எண்.27519-50/2021/பி2 நாள் 25.08.2022ன்படி நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேற்படி, பணிகளை மேற்கொள்ள நகராட்சி நிர்வாக மண்டல செயற் பொறியாளர், தஞ்சாவூர் அவர்களுக்கு தொழில் நுட்ப அனுமதி கோரி முன்மொழிவுகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் நகராட்சி நிர்வாக மண்டல செயற்பொறியாளர், தஞ்சாவூர் அவர்களால் தொழில்நுட்ப அனுமதி எண்.58/2022-2023/இ1 நாள்.07.09.2022ன்படி தொழில் நுட்ப அனுமதி வழங்கியுள்ளார்கள். இந்நிலையில் மேற்படி. பணியினை நமக்கு நாமே திட்டம் 2021-2022ன்கீழ் மேற்கொள்ள சேம்பர் ஆப் காமர்ஸ், திருத்துறைப்பூண்டி, நிறுவனத்தாருக்கு பணி உத்தரவு வழங்கிட மன்றத்தின் அனுமதிக்கும், பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப் படுகிறது.<br><br>**<u>அலுவலக குறிப்பு:</u>**<br><br>**1.** மன்றம் அனுமதிக்கலாம்.<br>**2.** நமக்கு நாமே திட்டத்தின்கீழ் பெறப்பட்ட நிர்வாக அனுமதி மற்றும் தொழில் நுட்ப அனுமதியை மன்றம் பதிவு செய்யலாம்.<br>**3.** அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேற்படி பணியினை மேற் கொள்ள பணி உத்தரவு வழங்கிட மன்றம் அனுமதித்து பதிவு செய்யலாம்.<br>**<u>ந.க.எண்.2054-1/2021/இ1</u>** | **124** | **அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது** |

<table>
<tr>
<td>15</td>
<td>இந்நகராட்சியின் பொதுசுகாதாரப் பிரிவு டெங்கு நோய் தடுப்பு பணிக்கு புகை மருந்து அடிக்கும் இயந்திரம் பழுது ஏற்பட்டுள்ளதால், சீர் செய்து வழங்கிட ஆகும் உத்தேச செலவினம் ரூ.35000/-க்கு மன்றத்தின் அனுமதிக்கும், பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.<br><br><u>அலுவலக குறிப்பு:</u><br><br>1. மன்றம் அனுமதிக்கலாம்<br><br>2. நகர் பகுதியில் நோய் தடுப்பு பணியின் அவசர அவசியம் கருதி ஆகும் செலவினம் வருவாய் நிதியிலிருந்து செலவு செய்யலாம். நகர்மன்றத் தலைவர் முன் அனுமதி பெற்று உத்தரவு வழங்கியதை மன்றம் அனுமதித்து பதிவு செய்யலாம்.<br><br><u>ந.க.எண்.2168/2022/எச் 1</u></td>
<td>125</td>
<td>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
<tr>
<td>16</td>
<td>இந்நகராட்சியின் பொதுசுகதாரம் பிரிவில் பயன்படுத்தப்பட்டு வரும் புகை மருந்து அடிக்கும் இயந்திரம் பழுது ஏற்பட்டுள்ளதால் உடன் சீர் செய்து வழங்கிட நாள் 17.08.2022-ல் விலைப்புள்ளி கோரியதில் கீழ்க்கண்டுள்ள நிறுவனங்களிடமிருந்து 25.08.2022-ல் மூன்று விலைப்புள்ளிகள் வரப்பட்டது.<br><br>
<table>
<tr><td>வ.எண்</td><td>ஒப்பந்த நிறுவனத்தின் பெயர்/ முகவரி</td><td>தொகை ரூ.</td></tr>
<tr><td>1.</td><td>Sakthi Industries, 46E. Vetri Vinayarkovil street, Chengalpattu 603 001.</td><td>35,400/-</td></tr>
<tr><td>2.</td><td>Thread Fast, 229F. Dhanapal street, Ekatuthangal, Chennai 600 097.</td><td>36,300/-</td></tr>
<tr><td>3.</td><td>Om Sakthi Tech Services, 115/ Nandha Midas city, Aathoor Village,Chengalpattu 603 101.</td><td>34,650/-</td></tr>
</table></td>
<td>126</td>
<td>அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| | மேற்படி வரப்பட்டுள்ள விலைப்புள்ளியில் குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள வரிசை எண் 3-ல் கண்டுள்ள Om Sakthi Tech Services, 115/ Nandha Midas city, Aathoor Village, Chengalpattu அவர்களின் விலைப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதிக்கும், பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.<br><br>**<u>அலுவலக குறிப்பு:</u>** மன்றம் அனுமதிக்கலாம்<br><br>**<u>ந.க.எண்.2168/2022/எச் 1</u>** | | |
| **17** | இந்நகராட்சியின் பொதுசுகாதாரப் பிரிவிற்கு நகர் பகுதியிலும், பொதுமக்கள் கூடும் இடங்களிலும் தினசரி கிருமி பரவாமல் தடுக்கவும், சுத்தம் செய்வதற்கும் நகராட்சி நிர்வாக இயக்குனர் சென்னை-28 அவர்களின் கடிதம் ந.க.எண்.10608/2021/எச்1 நாள் 10.11.2021-ல் அளித்துள்ள விலை விகிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளபடி, பொதுசுகாதார பிரிவிற்கு 24.06.22-ல் விலைப்புள்ளி பெற்ற திருமலை டிரேடர்ஸ் எண்.எப்.எப்.3 ரெங்கா காம்ப்ளக்ஸ், திருச்சி என்ற நிறுவனத்தில் நீர்த்த சுண்ணாம்பு 5 டன் மற்றும் பிளீச்சிங் பவுடர் 2 டன் வாங்கிட ஆகும் உத்தேச செலவினம் ரூ.1,50,000/-க்கு மன்றத்தின் அனுமதிக்கும், பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.<br><br>**<u>அலுவலக குறிப்பு:</u>**<br>**1.** மன்றம் அனுமதிக்கலாம்.<br><br>**2.** பொதுசுகாதாரப் பிரிவிற்கு நோய் பரவாமல் தடுக்கும் பணிக்கு ஆகும் செலவினத்திற்கு வருவாய் நிதியிலிருந்து செலவு செய்ய நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று உத்தரவு வழங்கியதை மன்றம் அனுமதித்து பதிவு செய்யலாம்.<br><br>**<u>ந.க.எண்.952/2022/எச்1</u>** | **127** | **அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது** |

| | | | |
|---|---|---|---|
| **18** | இந்நகராட்சியின் பொதுசுகாதாரப் பிரிவு வாகனம் த.நா.50எல்-7339-க்கு வாகனத்தில் ஏற்பட்டுள்ள பழுதுகள் சரி செய்வதற்கு பொதுசுகாதாரப் பிரிவு அவசர அவசியம் கருதி, இவ்வலுவலக செயல்முறைகள் ந.க.எண்.2358/2020/ எச்1 நாள் 28.08.2020ன்படி உத்தரவிடப்பட்டு திருவாரூர் (டாடா மோட்டார்ஸ்) இந்தியன் ஆட்டோ ஏஜென்ஸி சர்வீஸ் நிறுவனத்தில் உதிரி பாகங்கள் மாற்றியதற்கு ரூ.17,814/-ஐ செலுத்திட கோரிய பட்டியல் வரப்பட்டுள்ளது. உரிய தொகை மேற்படி நிறுவனத்திற்கு செலுத்திட மன்றத்தின் அனுமதிக்கும், பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு:**<br>**1.** அனுமதிக்கலாம்.<br>**2.** பொதுசுகாதாரப் பிரிவின் அவசர அவசியம் கருதி ஆணையர்/நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பழுது நீக்கம் செய்ய உத்தரவு வழங்கியதை மன்றம் அனுமதித்து பதிவு செய்யலாம்.<br><br>**ந.க.எண்.2358/2020/எச்1** | **128** | **அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது** |
| **19** | இந்நகராட்சியின் பொதுசுகாதாரப் பிரிவில் பயன்படுத்தப்படும் வாகனம் த.நா.-50-AT-8955 (TATA ACE) வாகனத்திற்கு காப்பீடு பிரீமியம் 2022-23ஆம் ஆண்டிற்கு The Oriental Insurance, Thiruthuraipoondi நிறுவனத்திற்கு ரூ.25,000/- செலுத்திட மன்றத்தின் அனுமதிக்கும், பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.<br><br>**அலுவலக குறிப்பு:**<br>**1.** மன்றம் அனுமதிக்கலாம்.<br>**2.** நகராட்சியின் பொதுசுகாதாரப் பிரிவு பயன்பாட்டிலுள்ள வாகனத்திற்கான காப்பீட்டுத் தொகையினை வருவாய் நிதியிலிருந்து செலுத்திட மன்றம் அனுமதித்து பதிவு செய்யலாம்.<br><br>**ந.க.எண்.2535/2022/எச்1** | **129** | **அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது** |

| | | | |
|---|---|---|---|
| 20 | இந்நகராட்சியின் பொதுசுகாதாரப் பிரிவு பயன்படுத்தப்படும் வாகனம் த.நா.50-AT-8929 (TATA ACE) வாகனத்திற்கு காப்பீடு பிரீமியம் 2022-23ஆம் ஆண்டிற்கு The Oriental Insurance, Thiruthuraipoondi நிறுவனத்திற்கு ரூ.25,000/- செலுத்திட மன்றத்தின் அனுமதிக்கும், பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.<br><br>**<u>அலுவலக குறிப்பு:</u>**<br><br>**1.** மன்றம் அனுமதிக்கலாம்.<br><br>**2.** நகராட்சியின் பொதுசுகாதாரப் பிரிவு பயன்பாட்டிலுள்ள வாகனத்திற்கான காப்பீட்டுத் தொகையினை வருவாய் நிதியிலிருந்து செலுத்திட மன்றம் அனுமதித்து பதிவு செய்யலாம்.<br><br>**<u>ந.க.எண்.2536/2022/எச்1</u>** | **130** | **அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது** |
| 21 | இந்நகராட்சிப் பகுதியில் கொரோனா-II நோய் தடுப்பூசி போடப்பட வேண்டியதை பற்றிய அறிவிப்பு விழிப்புணர்வு நகராட்சி பகுதியில் ஒலி பெருக்கி மூலம் விளம்பரம் செய்யப்பட்டதற்கு கார் வாடகை, மைக்செட் வாடகை மற்றும் வாய்ஷ் உட்பட நாள் முழுவதும் ரூ.2500/- வீதம் (5) ஐந்து நாட்களுக்குரிய (ஜூலை-22 முதல் செப்டம்பர்-2022 வரை) விளம்பர கட்டணம் ரூ.12500/- திரு.கே.எம்.செந்தில்தேவா, தேவா பப்ளிசிட்டி மற்றும் ஸ்டுடியோ திருத்துறைப்பூண்டி நிறுவனத்திற்கு வழங்கிடவும், இது நாள் வரை மைக்செட் விளம்பரத்திற்காக மட்டும் வழங்கிய தொகை ரூ.3,53,000/- ஆகியுள்ளது. இனி வருங்காலங்களில் சொந்தமாகவே மைக் செட் வாங்கி பயன்படுத்திக் கொள்ள மன்றத்தின் அனுமதிக்கும், பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.<br><br>**<u>அலுவலக குறிப்பு:</u>**<br><br>**1.** மன்றம் அனுமதிக்கலாம். | **131** | **அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது** |

| | | | |
|---|---|---|---|
| | **2.** நகராட்சி பகுதியில் பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் விளம்பரம் செய்யப்பட்டதற்குரிய தொகையினை வருவாய் நிதியில் செலவு செய்யவும், புதியதாக மைக் செட் வாங்கி பயன்படுத்திக்கொள்ளவும் மன்றம் அனுமதித்து பதிவு செய்யலாம்.<br><br>**<u>ந.க.எண்.811/2022/எச்1</u>** | | |
| **22** | திருத்துறைப்பூண்டி நகராட்சியில் குடிநீர் பணிக்கு பயன்படுத்தப்படும் டிராக்டர் வாகனம் எண்.TN-50D-9878 வாகனத்தின் காப்பீடு முடிவடைந்து விட்டதால் அதனை புதுப்பித்தல் செய்திட மேற்படி காப்பீடு நிறுவனமான தி ஓரியண்டல் இன்சூரன்ஸ் கம்பெனிக்கு செலுத்த ஆகும் செலவினம் ரூ.20,000/-க்கு மன்றத்தின் அனுமதிக்கும், பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.<br><br>**<u>அலுவலக குறிப்பு:</u>**<br><br>**1.** மன்றம் அனுமதிவழங்கலாம்.<br><br>**2.** அவசர அவசியம் கருதி நகர் மன்றத் தலைவரின் முன் அனுமதி பெற்று தொடர் நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அனுமதித்து பதிவு செய்யலாம்.<br>**<u>ந.க.எண்.1720/2022/இ1</u>** | **132** | **அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது** |

ஒம்/ பா.கவிதா,
தலைவர்,
திருத்துறைப்பூண்டி நகர்மன்றம்.

/உண்மை நகல்/